2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிக்கை இருக்கின்றது, அதன்பிறகு பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. கலை அரசு, உட்காருங்கள், பிறகு பேசலாம் (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிக்கை இருக்கின்றது. அதன் பிறகு பார்க்கலாம், உட்காருங்கள்.*

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதிய பேருந்துகள் மற்றும் சிற்றுந்துகள் இயக்குதல் மற்றும் புதிய வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகங்கள் தொடங்குதல் உள்ளிட்ட போக்குவரத்துச் சேவையை மேம்படுத்தும் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் 3 அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் போக்குவரத்துச் சேவையினையும், போக்குவரத்துச் சேவையினைச் செவ்வனே புரிந்துவரும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் மேம்பாட்டினையும் உயர்த்தும் உன்னதமான திட்டங்களை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.*

முற்பகல் 11-20

தமிழகத்திலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் திறமையான மற்றும் தேவையான போக்குவரத்து வசதியினைப் பொதுமக்களுக்கு வழங்குவதில் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், செயல்திறன் மற்றும் நிருவாக மேலாண்மையில் பல்வேறு